www.tamilarangam.net

# அம்பலமாகும் மனித விரோதங்கள்

கடந்த 14.03.92 காலை புலிகளின் ஒஸ்லோ காரியாலயம் நோர்வே நாட்டு பொலிசாரினால் முற்றுகையிடப்பட்டு அதிலுள்ள ஆவணங்கள் பல கைப்பற்றப்பட்டதுடன் 23.03.92 தொடக்கம் நோர்வேயில் விடுதலைப் புலிகள் செயல்படக்கூடாதென்ற உத்தரவும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நம்மில் எத்தனை வீதமானோரால் அறிய முடிந்துள்ளது? தமிழீழத்தின் பாதுகாவலர்கள் என்று தம்மை கூறிக்கொண்டு, தமக்கு எதிராக குரலெழுப்புபவர்களை தேசத்துரோகியென முத்திரை குத்தும் இவர்கள் பற்றிய இந்த வெட்கத்திற்கும் வேதனைக்குமுரிய விடயம் புலம் பெயர்ந்து இங்கு வாழும் தமிழ் மக்களாகிய எமக்கு எப்படி தெரியாமல் போனது?. இந்தக் கேள்விக்குரிய விடை மிகவும் சாதாரணமானது தான். பல புத்தி ஜீவிகளையும் மாற்றுக்கருத்துடையோரையும் அப்பாவிப் பொதுமக்களையும் விழுங்கி ஏப்பம் விட்டு அதனையே மூடி மறைத்தும், நியாயப்படுத்தியும் இயங்கும் புலிகழுக்கு இந்தச் சம்பவத்தையும் மூடி மறைப்பதென்பது சாதாரண விடயம் தானே !?.

தமிழீழப் பாதுகாவலர்களாகிய (?) இவர்கள் தமிழீழ மக்கள் மீது அக்கறையற்று இருக்கலாம் . ஆனால் தமிழீழ மக்களாகிய நாம் நமது இந்தப்பாதுகாவலர் மீது அக்கறையற்று இருத்தல் தகுமா !?. கூடாது. கூடவே கூடாது.

நோர்வே நாட்டில் புலிகள் இயங்கக்கூடாது என்ற தடை உத்தாவு ஏன் போடப்பட்டது ?. இந்தக் கேள்விக்கான விடையை தமிழ் மக்களாகிய நாம் கேட்டறியக் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

ஐரோப்பிய நாடுகளில் போதைவஸ்துக்கள் கடத்துவதில் மிக முக்கிய பங்கை வகிப்பது தமிழீழ விடுதலைப் புலிகள் என்பது வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கும் உண்மை.சில தனி நபர்களை ஏஜண்டுகளாக வைத்து இந்தக் கடத்தல்களை இவர்கள் செய்தாலும் இதன் மூலம் பெறப்படும் பணம் முழுவதும் இங்கு இயங்கும் புலிகளின் முக்கியஸ்தர்கள் என்று கூறிக்கொள்பவர்களிடமே போய்ச் சேருகின்றன. இதற்கு உதாரணமான ஓர் சிறு சம்பவம் தான் (?) நோர்வேயில் (ஒஸ்லோ) இப்போது நடந்துள்ள நிகழ்ச்சி.

இவர்கள் இங்கு போதைவஸ்துக் கடத்தலிலும் வியாபாரத்திலும் பல பிற நாட்டவரையும் ஏஜண்டுகளாக வைத்துள்ளனர். ஆசியாவின் ஓர் நாட்டைச் சேர்ந்தவரை (அந்த நாட்டைக் குறிப்பிட விரும்பவில்லை மன்னியுங்கள்) ஏஜண்டாக வைத்து தொழில் செய்தவிடத்தில் பணம் கொடுக்கல்-வாங்குதலில் புலிகளின் தலை நகாப் பிரமுகருக்கும் அந்த வேற்று நாட்டவருக்குமிடையில் பிரச்சனை ஏற்பட்டது.இது கைகலப்பில் வந்த போது எப்படியோ பொலிசாரின் கவனத்திற்கு எட்டிவிட்டது . புலிகளின் ஒஸ்லோ காரியாலயத்தை முற்றுகையிட்டு ஆவணங்களை கைப்பற்றியதுடன் தடையுத்தாவும் பிறப்பிக்கப்பட்டுளது.

***அன்பான மக்களே ***

எமது மக்களுக்கும் , தேசத்துக்கும் விடுதலையையும் பொருளாதாரத் தன்னிறைவையும் பெற்றுத் தாவென்று போராடப் புறப்பட்ட இயக்கங்கள் மனித குலத்தையே அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் போதைப் பொருட்களைக் கடத்துவதிலும் விற்பனை செய்வதிலும் ஈடுபடுமானால் எமது தேசத்தின் , மக்களின் பெயரால் நடத்தும் விடுதலைப்போராட்டத்தை என்னவென்பது ??. இவர்களின் பொராட்டப்பாதை எங்கே செல்கிறது ?. இந்தத் தூள் கடத்தல் காரரின் கைகளிலேயா எமது தேச மக்களின் தலைவிதியை எழுதும் எழுத்தாணி ஒப்படைக்கப்பட்டுள்ளது ??.

களத்தில் நின்று போராடுகிறார்கள் என்று கூரிக்கொண்டு இன்னமும் நாம் கண்களை மூடிய படியே தான் இருக்கப் போகிறோமா.?. எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் எமது உரிமைகளை எப்போது நிலை நாட்டப் போகிறோம்.விடுதலையின் பெயரால் நடத்தப்படும், கொலை, கொள்ளை ,கடத்தல்களிற்கு நாமும் சம்மதம் என்பது போல மௌனத்தால் காட்டுகிறோமா ??. நகையும் பணமும் கொடுத்தால் எமது கடமை முடிந்து விட்டது என்பது தான் விடுதலையின்பால் நாம் கொண்டுள்ள அக்கறையா ?.

'' ஆயுதங்கள் தான் எமது தெய்வங்கள் '' என்று பொது அரங்கங்களிலே பேசும் இவர்கள் மக்கள் சக்தி மிகவும் பலமுடையது என்பதை மறந்து விட்டார்களா............. இவர்கள் எப்படி மக்களில் நம்பிக்கை கொள்வார்கள்.? சிந்தியுங்கள் எமக்காக இல்லை எனினும் எமது எதிர்கால சந்ததிக்காக . சற்று சிந்தியுங்கள் !

பி.கு ''தூள் கடத்தல் '' விவகாரத்தை அரசு பத்திரிகையில் வெளியிடாததற்கு காரணம் தமிழ் மக்களும் தூள் கடத்துவோர் என்ற பெயர் வாராது இருப்பதற்கு என முக்கிய வட்டா செய்திகள் கூறுகின்றது தயவு செய்து இதனை மொழி பெயர்க்க வேண்டாம்.

நன்றி
மீண்டும் சந்திப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்